2017 ஜூன் 28]

அமைப்பதற்கு ஆணையிட்டு, அதில் 40 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள பணிமனைகளை அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இடத்தில் புதிய பணிமனையை வருகின்ற நிதியாண்டில் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.செல்வராசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

குடமுழுக்கு

***6052—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, காருகுடியிலுள்ள அருள்மிகு சிவன் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், காருகுடி அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 10–3–2003 அன்று நடைபெற்றுள்ளது. 12 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது தொல்லியல் துறையின் கருத்துரு பெற்று, திருப்பணி மேற்கொள்ள ஏதுவாக, மதிப்பீடு தயாரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்நாளின் கடைசி வரை தமிழ்ச் சமுதாயத்திற்காகவே வாழ்ந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியே தன் இலட்சியம் எனச் சூளுரைத்து, இன்று வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்கள் தாயின் கனவுகளை, இலட்சியங்களை, தன் உயிர் மூச்சாகக்கொண்டு அல்லும் பகலும் அயராது பாடுபடும் அருமை அண்ணன் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காருகுடி என்னும் கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு கைலாசநாதர் ஆலயம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட திருக்கோயிலாகும். ரேவதி நட்சத்திரத்திற்குப் பெயர் பெற்ற இத்திருக்கோயிலில் இப்பொழுது ஒரு கால பூஜை மட்டுமே நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு சுமார் 17 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்தவும், மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த அன்னதான திட்டத்தைச் செயல்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடப்பாண்டிலேயே ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, இந்த ஆண்டே பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி பேரூராட்சியில் அமைந்திருக்கும் அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் நூறாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமை வாய்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில், சந்திராஷ்டமம் உள்ளவர்கள் தரிசனம் செய்தால் தோஷம் நீங்கும் என்ற ஐதீகத்துடன் ஜாதகரீதியாக அமையப் பெற்ற திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் குடமுழுக்கு விழா நடந்து 20 ஆண்டுகளாகிறது. ஆகவே, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, துறைரீதியாக இப்பொருள் குறித்து ஆய்வு செய்து, உரிய நிதி ஆதாரத்தைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் கோரிய திருக்கோயிலில், புனரமைப்புப் பணி மற்றும் குடமுழுக்கு நடத்த அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இசைக் கல்லூரியில், விரிவுரையாளர், பயிற்சியாளர், ஆசிரியர்கள் என பல காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியிருக்கின்றன. அதில் மாண்புமிகு*

அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு அந்த காலிப் பணியிடங்களை நிரப்புவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற அம்மாவின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ் இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வள்ளியூரிலே முருகப்பெருமானின் திருக்கோயில் அமைந்துள்ளது. அங்கே ஒரு திருமண மண்டபம் அமைக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களினுடைய நெடுநாள் கோரிக்கையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகப் பரிசீலித்து, வள்ளி, தெய்வானையுடன் திருமணக் கோலத்திலே இருக்கின்ற முருகப்பெருமானின் இத்திருத்தலத்திலே ஒரு திருமண மண்டபத்தை அமைத்துத் தந்தால், அங்கிருக்கின்ற பொது மக்களுக்கும் ஏழை, எளிய மக்களுக்கும் மிகப் பெரிய பயனைத் தரும் என்பதால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய வள்ளியூர், முருகப்பெருமான் திருக்கோயிலுக்கு

2017 ஜூன் 28]

திருமண மண்டபம் கட்டுவது குறித்து ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திருமண மண்டபத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்து, மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள ஆவூரில் 60 இலட்சம் ரூபாயில் பணிகள் நடைபெற்று குடமுழுக்கு செய்யப்படாமல், பாதியிலேயே இருக்கிறது. அதேபோல் கீழாத்தூர் என்கிற ஊரிலேயும் பணம் ஒதுக்கப்பட்டு,* tender *விடப்பட்டு, அந்தப் பணிகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன. அதேபோல மங்கலம் கிராமத்தில் உள்ள பழம்பெரும் கோயிலில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அரசாங்கம் பணம் கொடுக்காததால், பாதியிலேயே வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை கோயிலுக்கு பல கோடி ரூபாய் வருமானம் வந்து* deposit*–ஆக செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்திலே இருக்கின்ற கிராமப்புற கோயில்களைச் சீரமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

முற்பகல் 11–15

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். அந்த கிரிவலப் பாதையிலே இருக்கின்ற அத்தனை கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் செய்து, 12 ஆண்டுக்காலத்திற்கும் மேலாகிறது. ஆகவே, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை கோயிலினுடைய டெபாசிட் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதைப் பயன்படுத்தி இவற்றை எல்லாம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

[2017 ஜூன் 28

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது குடமுழுக்கு செய்யவில்லையென்று கோரிக்கைகளை வைத்தார். மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த காலங்களில் ஆதி திராவிடர் பகுதிகளில் 500 கோயில்களுக்கு ஒரு கோயிலுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கி, புனரமைப்பு செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 500 கிராம கோயில்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ஒதுக்கி, ஆக மொத்தம் 1,000 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த 3 திருக்கோயில்களிலும் இன்னும் ஒரு மாதத்திற்குள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் இன்னும் 2 மாதங்களில் குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை முறைகேடுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் தேதி தடை செய்யப்பட்டிருக்கக்கூடிய குட்கா என்கிற ஒரு போதைப் பொருளை விற்பனை செய்ததாக வருமான வரித் துறை ஒரு சோதனை நடத்தியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேரவை விதி 55–லும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்.